2010 நவம்பர் 12] [திரு. கே.பி.பி. சாமி]

மீட்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு தீவிரமாக மத்திய அரசின்மூலமாகவும் மேற்கொண்டுள்ளது. நம்முடைய தமிழகத்திலிருந்து இலங்கை கடல் எல்லையிலே மீன் பிடிக்கப் போகும்போது அவர்களை மீட்பது பெரிய பிரச்சினை; அது இரு நாட்டுப் பிரச்சினை. இதுவோ மூன்று நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகிறது. இந்திய மீனவர்கள் சவுதி அரேபியாவிற்கு மீன் பிடிக்கச் சென்றிருக்கிறார்கள். சவுதி அரேபியாவிலிருந்து கத்தார் நாட்டுக் கடல் எல்லையைத் தாண்டுகிறபோது அவர்கள் அங்கே கத்தார் நாட்டுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கான முயற்சிகளை வழக்கம்போல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வந்து கொண்டிருக்கிறார்கள். மீனவர்களையும் வழக்கம்போல் மீட்டுக்கொண்டிருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். ** என்பதனை நான் இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினை எங்கே இருந்து வருகிறது? (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் குற்றச்சாட்டாகச் சொல்லப் போகத்தான், அமைச்சர் அதற்கு பதில் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் பேசும்பொழுது, வேண்டுமென்றே நம்முடைய முதலமைச்சர் அவர்கள்மீது குற்றம் சுமத்துகின்ற வகையில் ** என்று சொல்லிய அந்த வார்த்தைகளை அவர் வாபஸ் பெற்றால், மாண்புமிகு அமைச்சர் பேசிய அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பேட்டிலிருந்து எடுக்கலாம். (குறுக்கீடுகள்)

(ஈ) அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பயிற்சிக் கல்லூரிகளில் பயின்ற செவிலியர்களுக்கு அரசுப் பணியிடம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2010 நவம்பர் 12

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய அங்கீகாரம் பெற்ற செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் படித்த மாணவிகளுக்கு கடந்த காலத்தில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததன் காரணமாக அரசுப் பணி வழங்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், சமீபத்தில் நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதல் கிடைக்கப்பெற்றதன் காரணமாக, அரசினுடைய அங்கீகாரம் பெற்ற தனியார் செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி முடித்த மாணவிகளை அரசு மருத்துவமனைகளில் செவிலியராகப் பணி நியமனம் செய்வதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், அவருடைய துறையும் முடிவு செய்து, அவர்களுக்கு உதவி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியது சம்பந்தமாக அரசினுடைய நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) கத்தார் நாட்டு சிறையிலுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், உங்கள் உறுப்பினர் மாண்புமிகு முதல்வர்மீது குற்றச்சாட்டு சொன்னார்கள். அதற்குப் பதிலாக கடந்த காலத்தில், உங்கள் ஆட்சிக் காலத்தில் உங்களுடைய முதல்வர் செய்ததை அவர் சொன்னார். இதிலே என்ன இருக்கிறது? *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கேட்பதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. எதிர்க்கட்சியிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள், யாராவது ஒருவர் முன் வரிசையிலே உட்கார்ந்திருக்கிறவர்கள் எழுந்து கேட்கலாம். 'வழக்கமாக', எல்லோரும் வழக்கமாக, எழுந்து எழுந்து நிற்கிறார்களே! இது என்ன வழக்கம் என்று கேட்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*